## நவம்பர் - 12

**"அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு."**

**- யோவா 20 : 27.**

கர்த்தர் பேரிலுள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அவருடைய நன்மையிலும், அவருடைய வல்லமையிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும், அப்பியசித்தாலொழிய கர்த்தரிடத்தில் நெருங்கி வருவது நமக்குக் கூடாத காரியமாகும். விசுவாசம் பயிரிடப்பட்டு விருத்திச் செய்யப்பட வேண்டிய ஒரு காரியமாயிருக்கிறது. கலிலேயா கடலின் மேல் சுழல்காற்று உண்டானபோது, பயத்தினால் கூக்குரலிட்ட அதே அப்போஸ்தலர் படிப்படியாக விசுவாசத்தில் அதிகமதிகமாக பலமடைந்து, எழுதிவைக்கப்பட்டிருக்கிற குறிப்புக் காட்டுகிற பிரகாரமாக கர்த்தர் பிரசன்னமாக இல்லாதபோதும் அவரை அவர்கள் கண்டுபிடிக்கக்கூடாத இடத்திலும் அவரை நம்பக் கூடியவர்களாய் இருந்தார்கள் நம்பினார்கள். இந்த விதமாக நம்முடைய விசுவாசம் அவரில் வேரூன்றி நிலைப்பெறத்தக்கதாக, அதுபோல கர்த்தரில் நம்பிக்கைக் கொள்ளப்பயிலுவதும், கடந்த நாட்களில் நமது ஜீவியத்திலுள்ள அனுபவங்களையும் அவருடைய வார்த்தையிலுள்ள எல்லா படிப்பினைகளையும் நினைத்துப்பார்ப்பதும் நம்முடைய அன்றாட பாடத்தின் ஒரு பாகமாக அது இருக்க வேண்டும்.

**- Z ’04, 89 (R 3337)**

ஒருவன் அவிசுவாசியாயிருப்பது, தேவன் கிறிஸ்து இவர்களுடைய ஆள் தன்மை, குணங்கள், வார்த்தைகள், கிரியைகள் சம்பந்தமாக இவர்களைக் குறித்த மனதிற்குரிய உண்மையான மதிப்பையும் அவர்கள் மேலுள்ள இருதயப்பற்றையும் அப்பியாசிக்காதவன் என்பதைக் குறிக்கிறது. விசுவாசியாயிருப்பது, ஒருவன் தேவன், கிறிஸ்து இவர்களுடைய ஆள்தன்மை, குணங்கள், வார்த்தைகள், கிரியைகள் சம்பந்தமாக இவர்களைக் குறித்து மனதிற்குரிய உண்மையான மதிப்பையும் இவர்கள் மேலுள்ள இருதயப்பற்றையும் அப்பியசிக்கிறவன் என்பதைக் குறிக்கிறது. தேவனும், கிறிஸ்துவும், அவிசுவாசத்திற்குப் பாத்திரராயில்லை. தேவனுடைய எந்த பிள்ளையும் அவர்களை இதனால் அவமதிக்க கூடாது. ஏனென்றால், தேவனும், கிறிஸ்துவும் நம்பக்கூடியவர்கள் அல்ல என்று அவிசுவாசம் அவர்களிடம் செயலில் அறிவிக்கிறது. அதற்குமாறாக, தேவன் கிறிஸ்து இவர்களுடைய ஆள்தன்மை, குணங்கள், வார்த்தைகள், கிரியைகள், இவைகளில் அவர்கள் நம்பத்தகுந்தவர்களாயிருக்கிறபடியால், நாம் அவர்கள் பேரில் முழுமனதாக சார்ந்திருக்கிறோம் என்று அவர்களுக்கு செயலில் நிரூபித்துக் காட்ட நாம் மிகவும் பக்திவைராக்கியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இவ்விதமாக நாம் அவர்களுக்குப் பிரியமானவர்களாக இருப்போம்.

**- P ’36 165, 166.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 4:1; எண் 20:12; சங் 78:19,21,22,32; 95:8-11; 106:7,24; ஏசா 7:9; 53:1-3; மத் 17:17,19,20; மாற் 6:2-6; 9:24; 16:14,16; லூக் 8:12,18; 24:11,21,25,26; யோவா 16:8,9; ரோம 3:3; 10:6,7,14.

**கோபுர வாசிப்பு** : Z ’15, 40 (R 5624).

**வினாக்கள்** : இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?